முருகப்பெருமான் துணை

**மகான் காசிபர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.05.2023**, திங்கட்கிழமை

1. மாதருமம் வளர்த்து உலகினில்
மகத்துவம் தரவந்த அரங்கனே
பூதலத்தில் உன் தருமம் நிலைக்க
புண்ணிய உலகாக மாறி இனிதே
2. இனிதே உலகம் மாற்றம் பெறுமென
இயம்பியே அறிவுரை ஆசிதனை
இனிமைபட சோபகிருது விடைதிங்கள்
இயம்பிட மூவைதிகதி சோம வாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 15 ம் நாள், 29.05.2023, திங்கட்கிழமை)

3. வாரமதில் காசிபர் யானுமே
வழங்குவேன் உலகம் உயர்வுபெற
பாரதமெங்கிலும் அரங்கமகான்
பழுதில்லா அன்னதான சேவை
4. சேவை பெருகி நிற்க
சிறப்பான தருமபலத்தால்
அவனியெங்கும் தருமவான்கள்
அளவில்லாப் பெருகி இனிதே
5. இனிதே இந்த ஆற்றல்
எல்லாத் திக்கிலும் தருமமாக
கனிவேலவனும் எடுத்துச் செல்ல
கலியுகத்தார் யாவரும் ஏற்று நடத்த
6. நடத்தவே தரும பலத்தால்
நாட்டிடுவேன் எங்கும் அமைதி
இடரின்றி சமாதான நிலையாகி
எல்லாம் சமம் யாவரும் ஒன்றே என
7. என பேதநிலை ஏதுமில்லா
இணைந்து மக்களிடை மாற்றம்
ஞானவழி ஞானிகள் செயல்பாடாக
நாட்டிடுவேன் மாற்றம் கூடி

8. கூடியே ஞானவான்கள் தலைமை
குவலயத்தில் ஞானிகள் வெளிப்பட
தேடியே ஞான ஆட்சியாக
தேசிகன் வழிகாட்டலில் நிகழும்

9. நிகழவே ஞானிகள் பூசை
நித்தம் மக்கள் செய்து
செகத்தில் சுத்த சன்மார்க்க
சித்திநெறி பின்பற்றி வர

10. வருகவே சடுதி மாற்றம்
வையகம் கண்டுத் தேறும்
தருகின்ற தரும குணத்தால்
தயாபரன் யாவருக்கும் அருள

11. அருளவே ஞானிகள் படை
அளவிலா அகிலத்தில் பெருகி
அருள்மிக்க ஞானத் தலைமை
ஆறுமுகன் ஆசிபட அமையும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–